தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2021 இரட்டை/கடகம் (30-6/15-7-90) ஓர் உருபா (இதழ் எண்: 139)

நிலையான தமிழின முன்னேற்றமே தேவை!

தஞ்சை, தன்னுரிமை மாநாட்டைத்-தடை செய்தது தவறு! அதைவிடத் தவறு தலைவர்களைச் சிறைப் படுத்தியது!

அமைவும், நடுநிலையும், தற்சிந்தனையும், தொலைநோக்கும் கலைஞர்க்கு வேண்டும்!

தமிழின முன்னேற்றத்தில் தணியாத ஆர்வமும் அக்கறையும் ஈடுபாடும் மிகக் கொண்ட, **தமிழர் தேசிய இயக்கத் தலைவர்**, நம் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய திரு. பழ. நெடுமாறன் அவர்கள், தஞ்சையில், கடந்த 9-6-90, 10-6-90 ஆகிய இரு நாள்களிலும் முறையே நடத்த விருந்த **பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா, தமிழர் தன்னுரிமைச் செயலறிவிப்பு**(பிரகடன) **மாநாடு, தமிழர் தேசிய இயக்கத்தின் மூன்றாவது மாநில மாநாடு** ஆகிய மூன்று நிகழ்வுகளையும், **தமிழக அரசு**, அஃதாவது அதன் முதல்வர் கலைஞர் திரு. **கருணாநிதி** அவர்கள் தடை செய்து, அவை நடக்க விருந்த பெரிய பந்தலையும் காவல் துறை அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்துப் பிரித்தெறிந்து, மகிழ்வடைந்தார்.

காவல் துறை அதிகாரிகளோ, தங்களுக்குக் கிடைத்த அதிகாரத்திற்கும் பல படிகள் மேலே சென்று, அம் மூன்று மாநாட்டு நிகழ்வுகளுக்காகத் தஞ்சையில் வந்து தங்கியிருந்த தலைவர்களையும் தமிழறிஞர்களையும் முறையல்லாத நிலையில், அவர்கள் வந்து தங்கியிருந்த விடுதிகளுக்கே சென்று, 9-6-90 அன்று விடியலிலேயே, மாநாட்டுத் தடையை மீறியதாகத் தளைப் படுத்தி-

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

போர்க் கோலம் பூணுவோம்! தமிழ்ப் பகைவர்களை வெல்லுவோம்!

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் மாவீரர். திரு. பழ. நெடுமாறனின் அறிக்கை!

சூன் 9—தமிழக வரலாற்றில் கறை படிந்த கறுப்பு நாள்.

தமிழரின் உரிமைக்குரல் எழாதவாறு தடுக்கப்பட்ட நாள். தமிழரின் குரல்வளை நெறிக்கப்பட்ட நாள்.

"தமிழுக்கு அமுதென்று பேர். அந்தத் தமிழ்— இன்பத் தமிழ்—எங்கள் உயிருக்கு நேர்" என வாய் மணக்க, செவி இனிக்க நெஞ்சம் மகிழப் பாடினனே புரட்சிப் பாவலன், அவனின் நூற்றாண்டுவிழாவிற்கும் தடை.

'தமிழர் தன்னுரிமை மாநாட்டி'ற்கும் தடை.

'தமிழர் தேசிய இயக்கத்தின் மூன்றுவது மாநில மாநாட்டி'ற்கும் தடை.

மொத்தத்தில் தமிழ் உணர்வுக்குத் தடை.

தடை போட்டவர்கள் தமிழ்ப் பகைவர்கள் அல்லர். ஆனால் தமிழின உணர்வைப் பயன் படுத்தி, ஆட்சி பீடத்தில் ஏறியவர்கள்தாம் தமிழர் உரிமைக் குரலுக்குத் தடை போட்டுள்ளனர்.

தடை போட்டதோடு இவர்கள் நிற்கவில்லை. தமிழுக்காகத் தங்கள் வாழ்நாளை ஈகம் செய்து (அர்ப்பணித்துக்) கொண்ட தமிழறிஞர்களைச் சிறைப் படுத்தவும் தயங்கவில்லை.

பாவலரேறு பெருஞ்சித்திரனர், சாலையார், சாலினியார் ஈக(தியாக)ச் செம்மல் பி. எசு. மணி, இசைப் புலவர் தண்டபாணி ஆகிய தமிழ்ச் சான்றோரையும் சிறையில் அடைத்த பெருமை இந்த ஆட்சியையே சாரும்.

தஞ்சை நகர் முழுவதுமே காவலர் (போலீஸ்) படையால் முற்றுகையிடப்பட்டது. மாநாட்டுப் பந்தலைச் சுற்றி அடிக்கொரு துமுக்கி (துப்பாக்கி) ஏந்திய காவலர் நிறுத்தப்பட்டார். நகருக்குள் வரும் ஊர்திகள் யாவும் கடும் ஆய்வுக்கு (சோதனைக்கு) உள்ளாக்கப்பட்டன. மாநாட்டில் பங்கேற்க வருபவர்கள் என்ற ஐயத்திற்கு ஆளாகும் அனைவரும் தளை (கைது) செய்யப் பட்டனர்.

காட்டாட்சிக் கட்டவிழ்த்து விடப்பட்டது.

மாநாட்டுத்திடலருகே கூடிய மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

தடையை மீறியதாகக் குற்றம்சாட்டி என்னையும் தமிழர் தேசிய இயக்கம், இந்திய மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சி தோழர்களையும் காவலர் (போலீஸ்) தளை செய்தனர். 'தெலுங்கு தேசிய விடுதலை இயக்கத் தலைவர்கள் மருத்துவர். மித்ரா' சீனிவாசராவ் ஆகியோரையும் இந்த ஆட்சி விட்டு வைக்கவில்லை.

பாரதீய சனதா, இந்து முன்னணி, இந்திரா பேராயம் போன்ற தமிழ்ப் பகைவர்கள் எழுப்பிய ஆங்காரக் குரலுக்கு முதலமைச்சர் கருணாநிதி அடி பணிந்து நம் மீது அடக்குமுறைக்கணைகளை ஏவி இருக்கிறார்.

தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள அவர் எதை வேண்டுமானலும் செய்வார் என்பது ஐயந்திரிபற மெய்ப்பிக்கப்பட்டு விட்டது.

தமிழ்நாட்டில் தமிழர் உரிமைக்காகப் போராடுபவர்களுக்கு மட்டும் அவர் இரண்டகம் (துரோகம்) செய்யவில்லை.

தமிழீழத்தில் இறுதிக் கட்ட விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கி இருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இரண்டகம் (துரோகம்) செய்ய அவர் தயங்கவில்லை.

மொத்தத்தில் தமிழின எழுச்சியைத் தடுத்திட முயலும் தமிழ்ப் பகைவர்களுக்கு வெண்சாமரம் வீசிடும் வேலையைக் கருணாநிதி செய்கிறார்.

இது கண்டு நான் வியப்படையவில்லை. எதிர் பார்த்தது நடந்துள்ளது. கருணாநிதி எதைச் செய்வார் என எதிர்பார்த்தேனே அதை அவர் செய்துள்ளார். இதன் மூலம் அவரது பொய்ம்மைப் புனைவு (வேடம்) அம்பலமாகியுள்ளது. தாம் யார் என்பதை அவர் வெளிக்காட்டிக் கொண்டுள்ளார்.

அடக்குமுறைகளால் நமது உரிமை வேட்கையை யாராலும் ஒழித்து விட முடியாது. கருணாநிதியைவிடப் பன்மடங்கு வலிமை படைத்த வல்லரசாளிகள் (சர்வாதிகாரிகள்) சரிந்து போன நிகழ்ச்சிகளை உலக வரலாறு நமக்குக் கூறுகிறது.

கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் முதன் முதலாக நமது மாநாட்டிற்குத் தான் தடை இடப்பட்டுள்ளது. இந்தக் குடிநாயக(சனநாயக)ப் படுகொலையைக் கருணாநிதி தமது கைகளால் செய்திருக்கிறார்.

"தமிழக வரலாற்றில் ஒரு திருப்புமுனை தோன்றி விட்டது" தமிழின எதிரிகளும் இரண்டகர்களும் (துரோகிகளும்) கை கோர்த்துக் களத்தில் காட்சி தருகின்றனர். வெளிப்படையாக வந்து விட்ட அவர்களை வெல்லுவது எளிது.

காலம் கனிந்துள்ளது, **'போர்க்கோலம் பூணுவோம்'; தமிழ்ப் பகைவர்களை வெல்லுவோம்!** O

Scanned with CamScanner

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யதுடன், அன்று காலை முதலாகவே தஞ்சைக்குள் பேருந்துகளிலும், தொடர்வண்டிகள் வழியாகவும் வந்து சேர்ந்த ஆயிரக்கணக்கான தொண்டர்களையும் ஆர்வலர்களையும் ஆதரவாளர்களையும் அடித்து விரட்டியதுடன், அவர்களுள் ஏறத்தாழ நூற்றுவர்களையும் காவல் துறை வண்டிகளில் ஏற்றிக் கொண்டு சென்று, குற்றஞ்சாட்டித் திருச்சி நடுவண் சிறையில் காவலில் வைத்தனர். அவர்கள் ஏறத்தாழ 20 நாள்கள் சிறையிருந்து பிறகு படிப்படியாக, குழுக் குழுவாகத் தஞ்சை வழக்கு மன்ற நடுவரால், இயக்கப் பொறுப்பில் விடுவிக்கப் பெற்றனர்.

தளைப் படுத்தப் பெற்றவர்களில் முகாமையானவர்கள், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் **பழ. நெடுமாறன்**, அதன் பொதுச் செயலாளர் **எம். கே. டி. சுப்பிரமணியம்**, மாநாட்டுச் செயற் குழுவினர், **சி. முருகேசன்**, **அ. வியனரசு**. **அ. மூர்த்தி**, அதன் மாநிலப் படைத் தலைவர் வழக்கறிஞர் **சியாவுதீன்**, உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் **பெருஞ்சித்திரனார்**, **துரை. தென்னவன்**, அறிவியக்க அமைப்பாளர்கள் பேராசிரியர்கள் **சாலை. இளந்திரையன்**, **சாலினி இளந்திரையன்**, இந்திய மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த **கி. வெங்கட்டராமன்**, **ஆர். கோவிந்தசாமி**, தமிழக இளைஞர் பேரவையைச் சேர்ந்த **பொழிலன்**, **சுகுமாரன்**, விடுதலைப் போராட்ட வீரர் **பி எசு. மணி**, **பேரா. சுப. வீரபாண்டியன்**, ஓய்வு பெற்ற பொறிபாளரும், இசைப் பாடலாசிரியரும் ஆகிய **ப. தண்டபாணி** முதலியோர் ஆவர்.

உலகில் உள்ள அனைத்துத் தமிழினத்திற்காகவும் அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் பெரிதும் பாடுபடுவதாகக் கூறிக் கொள்ளும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழக முதல்வரும் ஆகிய கருணாநிதி, இந்த வகையில் நடந்து கொண்ட அத்தனை நடவடிக்கைகளும் முறையற்றவையும் நடுநிலையில்லாதவையும், தொலைநோக்கற்றவையும், வஞ்சகமானவையும், பழி வாங்குபவையும், கோழைத்தனமானவையும், தம் பதவி, பணம், அதிகாரம் முதலியவற்றைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கம் கொண்டவையுமே ஆகும் என்பதை எவரும் சொல்லி உணர்ந்து கொள்ள வேண்டியதில்லை.

தமிழர்களுக்கென எந்த முன்னேற்ற முயற்சியையும் தாம் ஒருவரேதாம் முன்னதாகவும் முழுமையாகவும்—செய்தல் வேண்டும் என்பதும், அந்த நிலைக்கு மாறாக வேறு எவருமோ எந்தக் கோணத்திலுமோ, எந்த அளவிலுமோ செய்தாலும், அவர்களைப் பழி வாங்குவதும், அவர்களுடைய செயல்களை மறைமுகமாகவோ அதிகாரப் பின்னணியிலோ தடுக்கவும் தண்டனைக்குள்ளாக்கித் தகர்க்கவும் வேண்டும் என்பதுமே கருணாநிதியின் கைவந்த கரவான அரசியல் நெறிமுறைகள்.

தமக்குக் கிடைத்த மூன்றுந்தர நாலாந்தரப் பெயர்வழிகளைக் கொண்டு, தமிழையும் தமிழறிஞர்களையும் தாறுமாறாகவும், வரிசையறியாமலும் அவமதித்து வரும் செயல்களைப் போலவே, அவருடைய அரசியல் நடவடிக்கைகளும் தாறுமாறாக அமைந்து வருவது பெரிதும் வருந்தத் தக்கது. **இந்த வகையில் கலைஞரின் வலிவுக்கும் வல்லதிகாரத்திற்கும் எவையெவை காரணமாக அமைந்துள்ளனவோ, அவையே அவருடைய, மெலிவுக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்திருப்பது தமிழ்நாட்டின் ஆட்சி வரலாற்றில் பெரும் வியப்புக்குரிய ஒரு செய்தியாகும்.**

தமிழ்மொழிக்கும், தமிழின முன்னேற்றத்திற்கும் நிலையான விடிவு முயற்சிகளே, இன்றைய நிலையில் மிக மிகத் தேவை. வெறும் ஆரவாரமான, ஆடம்பரத்தனமான, விளம்பரத்தனமான, வேடிக்கைத்தனமான, போலியான, புன்மைச் செயல்களல்ல. கலைஞரின் திரைப்படக் கதைகளைப் போலவே அவருடை ஆட்சி நடவடிக்கைகளும் வெறும் கற்பனைக் கவர்ச்சி உத்திகளாக இருக்க வேண்டும் என்று அவர் நினைக்கின்றார் போலும்!

திரு. நெடுமாறன் மேலோ, அல்லது நம் போலும் ஓரிரண்டு தமிழ்மொழி, தமிழின முன்னேற்ற முயற்சியாளர்கள் மேலோ, கலைஞருக்குத் தனிப்பட்ட முறையில்,—அவரின் பின்பற்றிகளான ஆண்டியப்பர்களைப் போல நாங்களும் அவரை நோக்கிப் பல்லிளித்துக் கொண்டு, கையேந்திக் கரகம் எடுக்கவில்லை என்பதால்—காழ்ப்புணர்வோ, வெறுப்புணர்வோ, பழி வாங்க வேண்டும் என்னும் வஞ்சகவுணர்வோ இருக்கலாம்; அவை இருக்கவே இருக்கா என்பதற்கு எவ்வகையான ஓர் அடையாளக் கூறோ, கூற்றோ இதுவரை தப்பியும் தவறியும் அவர் வழி வெளிப்பட்டதில்லை.

ஆனால், அதற்காக ஏன் தமிழர்களின் தன்னுரிமை மாநாட்டைத் தடை செய்தல் வேண்டும்? அதனடிப்படையில் நடைபெறவிருந்த பாவேந்தர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியை ஏன் தடுத்து நிறுத்துதல் வேண்டும்? பாவேந்தர், கலைஞர் ஒருவருக்குத்தாம், அப்பனோ பாட்டனோ அல்லர். அவர் நெடுமாறனுக்கும் நமக்கும், சாலை இணையர்களுக்கும் கூட சொந்தமானவரே! உரிமையானவரே! பின் ஏன் அவர் நினைவு விழா நிகழ்ச்சிக்கும் சேர்த்துப் பொத்தாம் பொதுவில் தடையிடுதல் வேண்டும்? கலைஞரும் அவர் கூடாரத்தவருந்தாம்

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

கலைஞரின் தேவையற்ற செருக்கான பேச்சுகள்!

அவருக்கு ஒரு கடும் எச்சரிக்கை!

முழு அதிகாரப் பொறுப்பில்—பதவியில்—உள்ளவர்கள் பேசுகிற பொழுது மற்ற எவரையும் விட மிக விழிப்புணர்வுடன் பேசுதல் வேண்டும். அதிகாரம் கையிலிருக்கின்றதென்றோ, தமக்கே அனைத்தும் தெரியும் என்ற செருக்கிலோ, ஒன்றை முற்ற முடிபாகத் தேவையற்ற வகையில் பேசி விடக் கூடாது.

ஆனால், கலைஞர் அவையறிந்து ஆராய்ந்து சொல்லுகின்ற திறனைப் பல விடங்களில் இழந்து விடுகின்றார். சில விடங்களில் மட்டுமே அவரின் சொல்லுந்திறன் மேலோங்கி நிற்கிறது. சிற்சில விடங்களில் அவர் தேவையற்ற விளக்கங்களையும் அதிகார மமதை உறுதி மொழிகளையும் கொடுத்து, அவரைச் சார்ந்த இவ்வினத்திற்கும், மொழிக்கும் இழுக்கு வரும்படி பேசி விடுவது நம் போன்றவர்க்கு மிகுந்த வருத்தம் தருவதாக உள்ளது. '**சொல்லுக சொல்லிற் பயனுடைய**' என்பதை விட, '**சொல்லற்க சொல்லிற் பயனிலாச் சொல்**' என்பதை அவர் மிகுதியும் கடைப் பிடித்தல் வேண்டும்.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கச் சார்பில் சென்னையில் கடந்த 2-7-90 அன்று அவர் பேசிய நன்றியுரையில் கூறிய கூற்றுகள் இவை. இவற்றில் உள்ள புரைகளையும், புன்மைகளையும் அவரும், பிறரும் ஆழமாக எண்ணி விளங்கிக் கொள்வதுடன், இவ்வாறான பேச்சும் உறுதியுரைகளும் தேவைதாமா என்பதை ஒன்றுக்குப் பல முறை எண்ணி உணரவும் வேண்டுகிறோம். (செய்தியிதழ்களில் வந்த உரைகள் அப்படியே தரப் பெறுகின்றன.)

உரை: 1

"ஆஸ்திகன், நாஸ்திகன் என்ற வேறுபாடுகளை நான் பார்த்தது கிடையாது. காஞ்சிப் பெரியவருடன் கருத்து, கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும் கூட, அவர் மீது மதிப்பும் மரியாதையும் எனக்கு உண்டு"

—*தினமணி* 4-7-90.

—இப்படி—தந்தை பெரியாரைப் பற்றி இவர் மதிக்கும், 'மரியாதை' செலுத்தும் காஞ்சிப் பெரியவரோ அவரைச் சார்ந்த பிறரோ, இம்மாதிரி கருத்துரைத்திருப்பார்களா? தேவையற்ற குழைவு எதற்கு? வெட்கம்!

உரை: 2

"அரசுக்கு ஒரு வேண்டுகோளை 'சுஜாதா' விடுத்தார். தவத்திரு(!)அடிகளாரும் அதையே வலியுறுத்திக் கூறினார். இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப தமிழை வளர்க்க வேண்டும் என்று சுஜாதா கேட்டுக் கொண்டார். சில தமிழ்ச் சொற்களை உச்சரிக்க, பயன்படுத்த கஷ்டமாக இருக்கிறது. அதைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்...

.. நூற்றுக்கு நூறு அதை அப்படியே ஏற்கிறேன். ...விமானம், பேருந்து, சைக்கிள்—இந்தச் சொற்கள் வழக்கத்தில் பழகிப் போய் விட்டன. அவற்றைப் புறக்கணிக்கத் தேவையில்லை. அப்படியே பயன்படுத்தலாம். அந்த வகையில் அறிவியல் தமிழை வளர்க்க அரசு தன்னால் ஆன உதவியைச் செய்யும்,"

—*மாலைமுரசு*. 3-7-90.

'சுஜாதா'வோ, குன்றக்குடியடிகளாரோ அறிவியல் அறிஞராகவும், தமிழ் அறிஞராகவும் இருக்கலாம். ஆனால், தமிழுக்கு அதிகாரிகளோ, மொழியியல் அறிஞர்களோ அல்லர். அவரவர்களுக்கு உரிய கருத்து முடிவுகளை அவ்வத்துறையில் வல்லவர்களையேதாம் ஆட்சியில் உள்ளவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; கருத்துக் கேட்கவும் வேண்டும்.

கலைஞரும், தம் ஆட்களை விட்டு '**முத்தமிழ் அறிஞர்**' எனும் பட்டத்தைத் தமக்குத் தாமே சூட்டிக் கொள்வதாலேயே, என்றும் உள்ள தென்றமிழ்க்குத் தாம் அதிகாரி (Authority) ஆகி விட முடியாது.

அறிவியல் கருத்தை 'சுஜாதா'விடம் கேட்கலாம்; மதவியல் கருத்தை அடிகளாரிடம் கேட்கலாம். அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் தமக்குத் தேவை என்பதால், கலைஞரும் அதிகாரச் செருக்கில் அவர்களுக்குத் தலையையும் ஆட்டலாம்.

ஆனால் அதற்காக ஏற்கனவே வழக்கில் வந்து விட்ட '**வானூர்தி**'யையும், '**மிதி வண்டி**'யையும் "'விமானம்' என்றும், 'சைக்கிள்' என்றும்தான் அழைக்க வேண்டும்; அவற்றைப் புறக்கணிக்கத் தேவையில்லை; அந்த வகையில் அறிவியல் தமிழை வளர்க்க அரசு தன்னால் ஆன உதவியைச் செய்யும்." என்று கலைஞர் கூறுவதற்கு, அவர் ஒருவரே, ஒரு பேராசிரிய(!)முண்டம் சொன்னது போல, அவர் 'தமிழ்த் தந்தை' அல்லர்.

அதிகாரச் செருக்கில், மமதையில், தமிழை அழிக்க முனைபவர்கள் கூறும் கருத்தையெல்லாம், தம் தமிழறிவுக்கு ஒத்த வகையில் வாய்ப்பாகவும் வசதியாகவும் சான்றாகவும் கலைஞர் பயன்படுத்திக் கொள்ள விருப்புவாரானால், '**தமிழ் இருக்கும்; அவர் இருக்க மாட்டார்**' என்பதை எச்சரிக்கையாகவும் நொந்தவுள்ளத்தோடும் முன்னுணர்வோடும் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். O

Scanned with CamScanner

இந்து மதத்திலிருந்து தமிழர்கள் வெளியேற வேண்டும்!

மதமற்ற நிலை, மதச் சார்பற்ற நிலை, தமிழ் மதம் சார்ந்த நிலை-ஆகிய மூன்று கோட்பாடுகளில் தமிழனம் இயங்க வேண்டும்!

பார்ப்பனீயமே இந்து மதம்! தெரிந்தோ தெரியாமலோ பார்ப்பனீயத்திற்கு அடிமைகளாக இருக்க ஒப்புக் கொள்பவர்களே, இந்து மதத்தை விரும்புகின்றனர். அவர்களுக்கும் விழிப்பூட்ட வேண்டும்!

இந்து மதக் கோட்பாடுகளே இந்தியாவின் அரசியலாக, பொருளியலாக, கலை, பண்பாடுகளாக, உருவாகியிருக்கின்றன என்று சொன்னால் எவரும் மறுத்து மெய்ப்பித்து விட முடியாது. இந்து மதமே முழுவதும் பார்ப்பனியத்தையே அடித்தளமாகக் கொண்டது. எனவே, இந்தியாவைப் பொறுத்த அளவில் பார்ப்பனியம் இல்லாமல் அரசியல் இல்லை; பொருளியல் இல்லை; கலை, பண்பாடுகள் இல்லை. இன்னும் சொன்னால் மக்கள் தொடர்புள்ள வேறெதுவுமே இல்லை. மக்களுள்ளும் தெரிந்தோ தெரியாமலோ பார்ப்பனியத்திற்கு—பார்ப்பனர்க்கு அடிமைகளாக இருக்க ஒப்புக் கொள்பவர்களே, இந்து மதத்தை விரும்புகின்றனர்; அதை நிலைப்படுத்த முயற்சிகள் செய்கின்றனர். அவர்களுக்கு விழிப்பூட்ட வேண்டுவது நம் கடமை!

பார்ப்பனியத்தின் எந்தக் கூறுமே ஒரு நச்சு மரத்தைப் போன்றது! அதன் வேர், அடிமரம், கிளைகள், இலைகள், பூக்கள், பிஞ்சுகள், காய்கள், கனிகள், கொட்டைகள், பருப்புகள், இன்னும் அது வெளிப்படுத்தும் மணம், அதைத் தழுவி வெளி வரும் காற்று—என்று இவ்வாறு அனைத்தும் நச்சுத் தன்மை கொண்டவையே! இதை இந்துமதச் சார்புள்ள அல்லது சார்பற்ற எந்தக் கொம்பனாலும் பொய்—தவறு என்று கூறி விட முடியாது; கூறி மெய்ப்பித்து விட முடியாது. ஏனெனில் அது பற்றிய அத்தனை உண்மைகள் அடிப்படைகளாக—அடை அடையாக உள்ளன.

இந்த நிலையில், யார் எந்த வகையான அரசியல், பொருளியல், மொழியியல், கலை, பண்பாட்டியல் முயற்சியைச் செய்தாலும், அதைப் பார்ப்பனியத்தை எதிர்த்துக் கொண்டுதான் செய்ய வேண்டியுள்ளது. அதற்குப் பார்ப்பனியம் முழுவதும் தன் முழு மூச்சுடன் எதிர்ப்புக் காட்டித் தான் ஆகும். அவ்வெதிர்ப்பை எதிர்கொள்வது மிகவும் கடினமான ஒன்றாகவே இருக்கிறது. காரணம் இந்தியாவைப் பொறுத்த மட்டில், மக்கள் தொடர்புடைய அத்தனை ஆற்றல்களும் பார்ப்பனியத்தின் கைகளிலேயே உள்ளன. அதற்குத் துணையாக வலிவான ஆற்றலாக இருப்பதுதான் இந்து மதம். எனவே இந்து மதத்தை எதிர்த்துக் கொண்டு என்ன பணி-தொண்டு-செய்தாலும், அது இதுவரை வெற்றி பெற முடியாததாகவே உள்ளது. ஆகவே இந்து மதம் என்னும் அடிப்படை வலிவை நாம் அடியோடு தகர்த்தெறிந்தால் தவிர, எந்தக் கோணத்திலான நம் எந்த முயற்சியும் வெற்றி பெற முடியாததாகவே இருக்கும்.

இந்நிலைக்கு ஒரே ஓர் எடுத்துக்காட்டு போதும். அண்மையில் அரும்பாடு பட்டுக் கடந்த நாற்பது ஆண்டுகளாக இந்திய அரசியலில் தன் கால்களை மிகவும் ஆழமாக—அகலமாகப்—பரப்பிக் கொண்டு வேரூன்றியிருந்த ஒரு பார்ப்பனக் குடும்பத்தின் வல்லாளுமையை அகற்றிவிட்டுச் சனதாதளம்தான் அமைத்த தேசியக் கூட்டணி ஆட்சியில் கால் வைத்தது. நடுவணரசில் ஏற்பட்ட இந்த மாறுதலைப் போல் வேறு சிறு மாநிலங்களிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் அப் பார்ப்பனிய ஆட்சிக்கு மாறான என்று சொல்ல முடியாவிட்டாலும், இசைவில்லாத ஆட்சி நடந்து வரலானது. இருப்பினும் இவ்வாட்சி மாற்றங்களுக்கும் கூட, முழு அளவில் இல்லையென்றாலும், பெரும் அளவிற்குப் பார்ப்பனியம் துணை நிற்க வேண்டியிருந்தது. இந்த நிலைதான் இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்தின் நிலையும்; நடுவணரசின் நிலையும்.

இந்த ஓர் உண்மையைக் கொண்டே, பார்ப்பனியம் என்பது, இந்தியாவைப் பொறுத்த அளவில் மக்களியல் கூறுகள் அனைத்துக்கும் எவ்வாறு அடிப்படையான ஆற்றலாக உள்ளது. என்பதை நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். அத்துடன் அந்தப் பார்ப்பனியத்திற்கு எல்லா நிலைகளிலும் இந்து மதமே, தனியான, வலிவான ஒரு பேராற்றலாக விளங்குவதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு பார்ப்பனியம் இந்து மதத்தையும், இந்து மதம் பார்ப்பனியத்தையும், ஒன்றையொன்று கவ்விக் கொண்டும், இழுத்துப் பிடித்துக் கொண்டும், இருதலை நாகம் போல் உள்ளது.

இனி, எதிர்பாரா வகையில் இவ்வாறு அமைந்து விட்ட, பார்ப்பனியச் சார்பற்ற அரசைப் பார்ப்பனர்கள் எந்த வகையிலும் பொறுத்துக் கொள்ள முடியாதவர்களாகி நிற்பதை, இப் பார்ப்பனரல்லாத தலைமையரசுகளை வீழ்த்த பொதுவாக நடுவணரசிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் பார்ப்பனர்கள், இந்த அரசுகள் அமைந்த நாள் முதலாகத் தொடர்ந்து பல வகையிலும் குற்றம்

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

கண்ணீர் பட்டவை! "தூண்டில்முள்"

'அறந்தையாரின்' இனப் பற்றும்-கலைஞர் மேற் கொண்ட கரிசனையும்

'சனசக்தி' அதில் 'எரிமலை' யாக வெடிப்பவர் அறந்தையார். அவருடைய 'கேள்வி'யில் ஒரு வியப்பு...,

"கலைஞரை இனத் துரோகி என்பதா?" (சனசக்தி—12-6-90)

அறந்தையார், இதுவரை 'வர்க்க'ப் போராட்ட வீரராகவே முழங்கி வந்திருக்கிறார். ஆனால், திடீரென 'இன நல' வீரராக...அதன் 'இரண்டகப் போக்கை' எதிர்க்கும் எரிமலையாக முனைந்திருக்கிறார் என்றால் வியப்பு வாராமல் என்ன செய்யும்? அதுவும் 'கலைஞரை'ப் பற்றி இவருக்கு இத்தனை கரிசனையிருக்குமெனக் கனவில் கூட நமக்குத் தோன்றியிருக்க முடியாது.

அதற்கான காரணம் எதுவாக இருக்கும்? அவருடைய எழுத்து மூலத்திலிருந்தே பார்ப்போம்...

இந்திய ஒருமைப்பாட்டிற்கு உறுதுணை செய்த தமிழக அரசையும், முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியையும்...தாம் அறந்தையார் இசைபாடி வரவேற்றுள்ளார்!

"இந்திய ஒருமைப்பாட்டிற்கு
உறுதுணை..."

என்பது, அறந்தையார் கருத்துப்படி.

மாநாட்டைத் தடை செய்வது...மக்கள் (சன)நாயக உரிமையைத் தடுப்பது...மாநாட்டுப் பந்தலைப் பிரிக்கும்படி ஏவுவது...

சுவரொட்டியைப் பறிப்பது...
பாவலர்களின் கருத்துரிமை மீது
கை வைப்பது, அவர்களைக்
காட்டிக் கொடுப்பது...
அரசுக்கு ஆதரவாக நிற்பது...
மக்களின் எழுச்சிக்குப்
பிரிவினை...வகுப்பு வாதம்
என முத்திரை குத்துவது...

எனப் பலவாறு விரிகிறது!!

"வகுப்பு வாதிகள்,
பிரிவினை வாதிகள் மீது
கடுமையான நடவடிக்கைகள் தொடரட்டும்"

எனக் 'கலைஞரை' வாழ்த்துகிறார்; தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறார் அறந்தையார்!

இந்த அமைப்பை அடியோடு புரட்டிப் புரட்சி நடத்தப் போகிற கட்சியின் எழுச்சி மிக்க எழுத்தாளர், இந்த அமைப்பை அடிப்படை அசையாமல் கட்டி நிறுத்த இயங்கியல் பார்வையின்றி எழுதுகிறாரே...எப்படி?

வகுப்பு'வாதம்'...
பிரிவினை 'வாதம்'...

இந்த 'வாதங்களுக்கு', இந்த அமைப்பும், இதைக் கட்டிக் காக்கும் அரசும், அரசுக்கு ஆதரவான நடவடிக்கைகளும் காரணம் என்பதை அறந்தையார் புரிந்திருக்கவில்லையா?

"ப. நெடுமாறன்—இவர், பெயருக்குத்தான் தலைவர்" என்கிறார் 'அறந்தையார்! "இவரை இயக்குபவர்கள் பெருஞ்சித்திரனார், சாலை இளந்திரையன்"-என்று சிலர் கருதுகிறார்கள்" என்றும் விட்டேற்றியாகக் கூறுகிறார். இவர் 'கருதுவதை' ஏன் எழுதத் தயங்கிறாரோ!

'பெருஞ்சித்திரனார்
சாலை இளந்திரையன்'

இருவரும் அரசியல் கட்சியாளர் அல்லர். தமிழின வரலாறும், தமிழ், தமிழினப் பெருமையும் அறிந்த இவர்கள், 'யாரையும்' இயக்க வேண்டியுள்ளவர்கள் இல்லை.

ப. நெடுமாறன், தி.மு.க. தமிழ்த் தேசியம், பேராயம், காமராசர் பேராயக் கட்சிகளின் பட்டறிவும், வரலாற்றறிவும், நேரிய உணர்ச்சியும் கொண்டவர்.

எழுத்துவணிகம் புரிபவரே, இலவய மது குடிக்க, வாங்கித் தருபவர்க்கு ஏற்பப் 'பேசுகிற'-வரே, குடித்தபின் குழறி, உளறிக் கொட்டுபவரே தன்னறிவின்றிப் பிறரின் 'தடம்' பார்த்து நடக்கிறவராகவும் 'பின்பற்றுபவராக'வும் இருக்க முடியும். ஏனெனில், 'பின்பற்றுதல்' இயங்குதல் இயக்குப்படுபவராய் இருத்தல் பற்றிய அறந்தையாரின் கருத்தை நாம் அறியாமல் எதையும்—வேறு எதையும்—சொல்லிவிட முடியாதன்றோ? பெருஞ்சித்திரனார்—நெருக்கடி நிலை அறிவிப்புக் காலத்திலேயே 'பிரிவினை மாநாடு' நடத்த முற்பட்டுச் சிறைப் படுத்தப் பட்டவர்.

நெருக்கடி நிலையில் இந்த அறந்தையாரும் அவர் கட்சியும் இந்திரா பேராயத்தின் 'தலை'யாக, இல்லை, 'வாலா'கச் செய்யபட்டதுண்டா இல்லையா என்பதை அந்த அறந்தையார்தாம் கூறுதல் வேண்டும்!

பெருஞ்சித்திரனாரின் கொள்கைப் பிடிப்பினை அன்று போல், இன்றும் கண்டு வருகிறார் அறந்தையார். அதனை 'வெளிப்படை'யாகக் கூறி-

யிருக்கிறார். அந்த 'மது'கைக்கு நமது பாராட்டுகள்!

'நெருக்கடி நிலையில்' இ. பொ. கட்சி இந்திரா பேராயத்துடன் தோள் தழுவி நின்று, அக் கட்சி 'தோல்வி தழுவியவுடன்', அக் கட்சியைக் கை கழுவி விட்டுத் தம் கொள்கை' விலகலுக்கு வருந்தித் 'தன் திறனாய்வு' செய்து கொண்டது!

நாம் இங்கே, பெருஞ்சித்திரனாரின் இயக்க வலுவைப் பேசவில்லை; அவர் தம் கொள்கை வலுவைத்தான் ஒப்பிட்டிருக்கிறோம்! சாலை இளந்திரையன் பற்றி அறந்தையார் எவ்வளவு அறிந்து வைத்திருக்கிறார் என்பது நமக்குத் தெரியாது. ஆனால், அறந்தை, பகல் நேரத்தின் 'கூகை' போல விழிப்பது...'சனசக்தி' படிப்பவர்களிடம் கொண்டு செல்லும் தவறுகளை நாம் இயன்றவரை தடுத்திட விரும்புகிறோம்!

கல்லூரியில், அரசுப் பணிகளில் பணி புரிந்து கொண்டு 'தீவிர'க் கட்சிப் பற்றுக் கொள்பவர், இ. பொ. க (CPI)வில் மட்டுமே இருக்கத் தக்கவர் என அறந்தையார் கருதுகிறார்!

'தமிழ்த் தேசியம்' பற்றித் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கியதாக நடிப்பவர்' சாலை இளந்திரையன் என்கிறார் அறந்தை. இவர் எதை வைத்து 'நடிப்பவர்' என்கிறார்! கலைஞரைப் போல நடிக்க முற்பட்ட 'அறந்தை' இன்று, 'கலைஞரை இனநலத் தலைவர்' என்று காட்டி ஒரு பாராட்டை எதிர்பார்த்துள்ளதை நடிப்பு என்பதா—இனநலக் கொள்கைக்கு ஆதரவாகச் சிந்திக்கத் தொடங்கியதாக நடிப்பவர் அறந்தை என்பதா?

'தமிழன்பன்' 'வளமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்' என்கிறார் அறந்தை, வளமான வாழ்வுக்காகத் தொலைக் காட்சியில் செய்தி வாசிப்பாளராகத் தமிழன்பன் உள்ளார் என்கிறார்? அவரேன், கரடுமுரடான, 'பிரிவினை' (அறந்தையார் கருத்துப்படி)ப் பாதையில் நடக்கிறார்?

"நகைமுகன் ராமச்சந்திரன் சென்னையில் சென்ற ஆண்டு நடத்திய தமிழகத் தன்னுரிமைப் பிரகடன மாநாட்டைப்" பற்றி நமக்கெதுவும் தெரியாது. அதில் ஒரே பார்வையாளராக நம் அறந்தை போயிருத்தல் வேண்டும்! அங்கே,

'தனித்துவம் பேணும்
உணர்ச்சி
தணலாகப் பரவும்' என்று பாடியவர்

தமிழன்பன் என்கிறார் அறந்தை. அதைவிடத் "துமுக்கித் (துப்பாக்கித்) குழலிலிருந்து அதிகாரம் பறக்கும்" என்று கூறிய மாவோ (என்கிறார் அறந்தை)வைப் புகழ்ந்து பாடியவராம் 'தமிழன்பன்'! எவ்வளவு பெரிய குற்றச்சாட்டு,

"பெருஞ்சித்திரனாரும் சாலை இளந்திரையனும் தமிழன்பனும்தாம் ப. நெடுமாறனை இயக்குகிறார்கள்? இல்லை!"—அறந்தை.

இயக்குகிறவர் பட்டியலில் மூன்றாவதாகத் தமிழன்பனை ஒட்டி விட்டு அடுத்து,

"கு. ராமகிருஷ்ணன்—" என்கிறார்! அடுத்-தடுத்து...மணியரசன், மா. லெ என்று அழைத்துக் கொள்ளும் சீர்குலைவாளர்...என்று பட்டியலை விரிவு படுத்திக் காட்டி, நாளை..."கலைஞர் கூறிய அவர்கள் (நெடுமாறன்) பின்னே அவர்களின் நிழல் கூடப் போகாது' என்ற 'வார்த்தை'யைப் பொய்யாக்கிப் பார்த்தீர்களா இந்தக் 'கலைஞர்' பிரிவினைக் காரர்களை வளர்த்து விட்டார் என வாயடி கையடி அடிக்க இப்போதே திட்டமிட்டு விட்டார் 'அறந்தை' என்று தோன்றுகிறது! குப்புற விழுந்து காட்ட எப்போதும் அறந்தை அணியமாகி இருப்பவர் அல்லவா?

வை. கோ வைத் திருட்டுத்தனமாக இலங்கை சென்று பிரபாகரனைச் சந்தித்தவர்—அவரைப் போல கு. ராமகிருஷ்ணனும் ஒருவர்—என்கிறீ 'எரிமலை', ப. நெடுமாறன் மீது எரிந்து விழவில்லை; ஏன்?

வை. கோவைக் கலைஞரிடமிருந்தும்—கழகத்திடமிருந்தும் பிரிப்பது—தமிழின உணர்வாளர்களுக்குள் 'மூட்டி' விட முயல்வது—இவ்வாறாக அரசியலில் நீர்த்துப்போய் வருபவர்களில் அறந்தையும் ஒருவர்!

'தேசிய இனம்' என்றால் இந்தச் 'சர்வ தேசியங்கள் அஞ்சி நடுங்கும். அதனாலேயே 'அதிகாரங்களை' நடுவில் பிடித்துத் தொங்கும் அதன் விளைவை, படிப்பினையை இன்றெழுந்துள்ள உருசிய-ஒன்றியச் சிக்கல்களிலிருந்தும் பெற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்.

அறந்தை,

"பதற்றம், பரபரப்பு சீர்குலைவு"கள் இந்தியா-வில் 'நிலைத்த தன்மையை' ஏற்படுத்தத் தடையாக உள்ளன என்கிறார்!

புரட்சி, மாற்றம் கூடாது. சுரண்டல் 'களம்' நீடிக்க வேண்டும். இதற்கெதிராக இவர்கள் போராடுவதில்லை. ஒருமைப்பாட்டிற்கு, சுரண்டல் களத்திற்கு 'ஆபத்து' வாராமல் போராட்டத்தை விலக்கிக் கொள்வார்கள்! இவர்களின் அணி தன்-மானமோ, தன் சிந்தனையோ இன்றிச் சுவரொட்டி ஒட்டுபவர்களாகவும், கொடி பிடிப்பவர்களாகவும், சொல்லச் சொல்லி முழங்குபவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதில் எவ்வளவு அக்கறையாக உள்ளார்கள்...'அறந்தை' உள்பட!

"கலைஞர் மீது ஆயிரம் திறனாய்வுகள் (விமர்-சனங்கள்] இருக்கலாம்" அப்போதெல்லாம் 'வசவு-கள்—திட்டுகள் மூலம் அருச்சினை பண்ணுவார் கலைஞர் மீது—வசவுகள், திட்டுகள் தாம் அறந்தை உரைப்படி திறனாய்வுகள்!

"தமிழ் மொழி மீதும், தமிழகத்தின மீதும் கலைஞர் கருணாநிதிக்குள்ள ஆழ்ந்த பற்றுதலைக்

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டி வருவதையும், இனக் கலவரங்கள், மதக் கலவரங்கள், அரசியல் கிளர்ச்சிகள், மக்கள் போராட்டங்கள் பலவற்றை உருவாக்கி எதிர்த்து வருவதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நடுவணரசைப் பதவி விலகச் செய்யும் கோரிக்கைகளும், தமிழக அரசைப் பதவி நீக்கஞ் செய்ய நடுவணரசுக்கு விடுக்கின்ற கோரிக்கைகளும், இப் பார்ப்பனிய—இந்து மதப் புகைச்சல்களின் விளைவே. இந்நிலையில், இனி, எதிர்காலத்திலாவது இப் பார்ப்பனிய-இந்து மதத் தாக்கங்கள் இல்லாமல், அவற்றின் வலிவுகளை நாம் குறைத்தொடுக்க வேண்டுமானால், இந்துக்கள் என்று கருதத்தக்க பார்ப்பனரல்லாத திரவிடர்கள்—தமிழர்கள் ஒட்டு மொத்தமாக அம்மதத்தினின்று தங்களை வெளியேற்றிக் கொள்ளுதல் மிக மிக இன்றியமையாதது.

தமிழர்களைப் பொறுத்த மட்டில் இந்து மதம் எனும் நச்சு மதம்—அவர்களை அடிமைப் படுத்தி, அனைத்து உரிமைகளையும் பறித்துக் கொண்டுள்ள வல்லாண்மை மதம்—உடனே அவர்கள் உதறித் தள்ளப் பட வேண்டிய ஒன்றாகும்.

தமிழினத்தவர்களை மதக் கொள்கையின் அடிப்படையில், மூன்று பிரிவுகளாகப் பிரிந்து நிற்பவர்களாகக் கருதலாம். அவை, மதமற்றவர்கள் (இறைமை, மதம் என்கிற உணர்வே இல்லை என்பவர்கள்), மதச் சார்பற்றவர்கள் (இறைமை உணர்வுள்ளவர்கள்; ஆனால் மதம் தேவையில்லை என்பவர்கள்); தமிழ் மதம் சார்ந்த நிலை (இறைமை உணர்வுள்ளவர்கள். பண்டைத் தமிழர் மதங்களாகிய சிவனியம், மாலியம்—இவற்றை விரும்புபவர்கள்; ஆனால் ஆரியத் தொடர்பை விரும்பாதவர்கள்)—எனப் பெறும் பிரிவுகளாக அமையலாம்.

எவ்வாறேனும் இந்து மதத்தினின்று தமிழர்கள் உடனே வெளியேறியாக வேண்டும். இது தொடர்பாக உலகத் தமிழின முன்னேற்றக் கழகமும் அதன் தொடர்புடைய தோழமைக் கட்சிகளும் பங்கெடுத்துக் கொள்ளும் தமிழகம் அளாவிய ஒரு பெரும் மாநாடு விரைவில் சென்னையில் நடைபெறவிருக்கிறது என்பதை மட்டும் இப்பொழுதைக்கு இங்குக் கூறிக் கொள்ள விரும்புகிறோம். அன்பர்கள் இது தொடர்பான வரவேற்பு எதிர்ப்பு எனும் இருமைக் கருத்துகளையும் நமக்குத் தெரிவிப்பார்களாக. —பெருஞ்சித்திரனார்.

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக்கேட்டுக் கொள்கிறோம். O

(முன் பக்கத் தொடர்ச்சி)

குறை சொல்லுவது பொருளற்றது (அபத்தமானது)''—ஆகா. எவ்வளவு கரிசனை கலைஞரிடம் அறந்தைக்கு!

எதையும் எதிர்பார்த்துச் சொல்பவரா என்ன அறந்தை?

ஆனால், இந்த உறுதிப்பாட்டைக் கலைஞரிடம் இனிவரும் 'எரிமலை'களில் காட்டுவாரா? ஐயம்தான்! தேர்தல் நேரம்—பிரிவு நேரம் வாய்ப்பு மாறும் போது—வாய்நாற—எழுத்து மாற முடியும்!

அறந்தையை விட்டால்
அரசியல்' எழுதச்
'சனசக்தி'யில் இடமில்லை!

உலக மக்கள் தொகைப் பெருக்கம்!

1600-ஆம் ஆண்டு இந்த உலகின் மக்கள் தொகை 50 கோடியாக இருந்தது. 1900-ஆம் ஆண்டில் அது 100 கோடிக்குக் குறைவாகவே இருந்தது. அஃதாவது 500 ஆண்டுக் காலத்தில் அதன் அதிகரிப்பு 50 கோடிக்கும் குறைவு. ஆனால் கடந்த 90 ஆண்டில், அஃதாவது இன்றைய நிலையில் அது 500 கோடியாகி விட்டது. அஃதாவது 400 கோடி அதிகரித்துள்ளது. இன்றைய நிலையில் ஆண்டு ஒன்றுக்கு 5 கோடி அதிகரித்து வருகிறது. அதுவும் படிப்படியாக அது கூடுதலாகவும் பெருகி வருகிறது. இந்த நூற்றாண்டின் இறுதியில் அஃதாவது 2000-ஆவது ஆண்டில் உலக மக்கள் தொகை 600 கோடியாக இருக்கும் என்று அஞ்சப் படுகிறது. இப்பொழுது 1 நிமையத்திற்கு உலகில் 100 குழந்தைகள் கூடுகின்றன; ஒரு நாளைக்கு உலகில் ஓர் இலக்கத்து நாற்பதாயிரம் குழந்தைகள் பிறந்து விடுகின்றன. O

குசராத்துக் கல்வி நிலையத்தில் தமிழ்வழிப் பாட வகுப்புகள்!

சென்னையிலுள்ள மிகப் பழைய குசராத்துக் கல்வி நிறுவனங்களில் ஒன்றான இசட். பி. எச் குசராத் கன்யா கேளவாணி மண்டலின் ஐம்பதாவது ஆண்டு விழாவையொட்டி, அந்த நிறுவனம் நடத்தும் கல்வி நிலையங்களில் தமிழ்மொழியின் மூலமாக இனிக் கல்வி புகட்டப்படும் என்று அறிவிக்கப் பெற்றிருக்கிறது. இதுவரை தமிழ் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப் பெற்று வந்தது. இதுவன்றி, ஏற்கனவே ஆங்கிலம், குசராத்து ஆகிய மொழிகளில் பாடங்கள் கற்பிக்கப் பெற்று வந்ததாம். O

தமிழன் என்று தலை நிமிர்த்திச் சொல்!

'தமிழனென்று சொல்லடா...'
தமிழனென்று சொல்லடா...

இஃதென்ன கீறல் விழுந்த
இசைத் தட்டுப் போல...

தமிழனா ... யார் தமிழன்.
அவன் எப்படி இருப்பான்?

இந்தியனைத் தெரியும்...
இந்தியனா...அவனெங்கே...?

"நான் இந்தியன் தான்;
நீ கூட இந்தியன் தான்"

எப்படிச் சொல்கிறாய்:

நீ இந்தியனாக இருக்கலாம்.
நான்...நான்...

'என்ன தயக்கம்?'
"நீ யார்? நீ யார்? சொல்லவில்லையே."

"வந்து...வந்து."

'வந்தாவது போயாவது;
நாணப் படுகிறாயே நீ, உன்னை யாரென்று கூற?'

நான்,
'முதலி, தேவர், செட்டி
பள்ளன், பறையன் ... இவற்றில்
ஏதோ ஒன்று'

"அட! சீ அதிலும் கூட உனக்கு
உறுதியில்லை; உண்மையில்லை"
"அதோ பார், அவனை
நீ யார் என்று கேள்"

அவன் 'மலையாளி'
'இவன் தெலுங்கன்'
அதோ 'மராட்டியன்'

நீ...பள்ளன், நீ முதலி...!
நீ ஏன் 'தமிழன்' இல்லை?
நீ தமிழ் தானே பேசுகிறாய்!
தமிழ் தானே
உன் தாய் மொழி?

'இல்லை நான் இந்தியன்'

நீ இந்தி பேசுகிறவனா?

"இல்லை"

"அப்படியானால்?"

"எனக்குச் சொல்லிக் கொடுக்கும்
ஆசான் 'நீ இந்தியன்' என்கிறார்;
என் படிப்புச் சான்றுகள் எல்லாம்
என்னை இந்தியன் என்றுதான்
சாற்றுகின்றன"

'உனக் கெங்கே அறிவு போயிற்று?'

'ஆம், நான் அறிவை இழந்து விட்டேனே?
'சாதி இழவும், அதிகார இழப்பும்
அடிமை நினைப்பும், என்னைத்
தமிழன் எனச் சிந்திக்க விடவில்லை'

'ஆயிரம் பெரியார்'
'ஆயிரம் தமிழின முழக்கம்!
இவை யெல்லாம்...
எனக்குத் 'தமிழன்' என்ற
உணர்ச்சி யூட்டவில்லையே!

ஏன்? ஏன்?

சோற்றுக் கடிமை...
சொந்தத்திற்கடிமை...
வேலையடிமை.
கூலியடிமை...
கொத்தடிமை...

'இந்த வுணர்ச்சி வந்து விட்டதா?
அடிமைப் படுத்துகிறவனை அடையாளம்
தெரிகிறதா?"

அப்படியானால்...
நீ 'தமிழன்'!

நான் 'தமிழன்'
நாம் தமிழரே!

—பறம்பை அறிவன்.

உலகச் செயற்கை மொழிகள்!

ஆங்கிலம் உலக மொழியாகப் பரவாத 17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் மேனாட்டு மொழியறிஞர் பெரும்பாலும் ஐரோப்பிய மொழிச் சொற்களை அடிப்படையாகக் கொண்டு வோலாபுக் (Volapuk), எசுப்பெரண்டோ (Esperanto), இடே (Ido), எசுப்பெரண்டிடோ (Esperantido), இண்டர்லிங்குவா (InterlinGua), நோரியல் (Norial)—முதலிய செயற்கை மொழிகளை உலக மொழிகளாகப் படைத்தனர்.

அப்பாத்துரையார் குடும்பத்திற்கு...

மறைந்த திராவிடவியல் வரலாற்றுப் பேரறிஞரும், பன்மொழிப் புலவரும் ஆகிய **கா. அப்பாத்துரை** அவர்களின் குடும்ப நலக் கொடை வேண்டுகோள் **தென்மொழி** சுவடி 25 ஓலை 5 இலும், தமிழ்நிலம் 134-இலும் வெளிவந்துள்ளதற் கேற்ப, அன்பர்களும் அருளாளர்களும் அவர் குடும்பத்திற்கு நன் கொடைகளை வாரி வழங்கி வருகின்றனர். நீங்களும் அவ் வருட் கொடை அருளாளர் வரிசையில் இடம் பெற வேண்டாமா? அவ்வாறாயின் நீங்கள் இன்றே இன்னே நம் பன்மொழிப் புலவர் **அப்பாத்துரையாரின்** துணைவியாருக்குக் கீழ உள்ள முகவரிக்கு உங்களால் இயன்ற நன்கொடையை அனுப்பிவிட்டுத் **தென்மொழி**க்கும் ஓர் அஞ்சலட்டையில் செய்தியை தெரிவியுங்கள். தொகை விடுக்கவேண்டிய முகவரி:
திருவாட்டி **அலர்மேலு அப்பாத்துரை**
10, அப்பாத்துரையார் தெரு, சென்னை-18.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

செய்திகள், கருத்துகள், செயற்பாடுகள்.

(துணைப் பொதுச்செயலர் பறம்பை அறிவன் அவர்களின் கருத்துகள், மடல்கள், அறிக்கைகள் முதலியன இப் பகுதியில் தொடர்ந்து வெளிவரும். தேவையானவிடத்து முதல்வர் அறிக்கைகளும், மடல்களும் அவ்வப்பொழுது இடம் பெறலாம்.)

1. அமர்த்தங்கள் 20-5-90

தலைவர், அமைப்பாளர்கள்:

(1) **அதியமான்,**
(தலைவர். உ. த. மு. க, நெல்லை மாவட்டம்) 9-147. தமிழ் இல்லங்கள் வளாகம், உள் மின்நிலையத்திற்கு எதிரில், தாழையூற்று, சங்கர்நகர் (அஞ்) நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்.

(2) **அருளாளன்,**
(அமைப்பாளர். உ. த. மு. க., நெல்லை. மாவட்டம்) தாவீது மின்பொருள் அங்காடி. தலைச்சாலை, ஆலங்குளம்—627851.

(3) புலவர் **சிவசங்கு,**
(தலைவர். உ.த.மு.க., வ. உ. சி. மாவட்டம்-)
தலைவர், கொற்கை தமிழ் மன்றம்.
சிறுத்தொண்ட நல்லூர் (அஞ்)
திருவைகுண்டம் (வட்).

(4) **பூ. வ. தமிழ்க்கனல்.**
அமைப்பாளர், உ.த.மு.க., வ. உ. சி.
மாவட்டம்
தமிழ்க்குடில்
125. அ. வரத விநாயகர் கோவில் தெரு,
அய்யனூர் ஊற்று,
தேவர் குளம்—627951.

(5) **க. செட்டியப்பன்** க. மு; க. இ.
பறம்புக்குடி நகர் வட்ட அமைப்பாளர்,
அரியனேந்தல் (அஞ்)
பறம்புக்குடி வட். 623707.

2. தோழமை இயக்கங்கள், தலைவர்கள், பெருமகர்கள், அன்பர்கள், ஆர்வலர்கள் ஆகியோர்க்கு வேண்டுகை மடல்கள், அறிக்கைகள்:

1) ஆர்வலர் அன்பர்க்கு மட்டும்!

''**மெச்சுந் தமிழ்க் குலமே மேல்**'' பாவலரேறு.

உ. த. மு. க. வின் கொள்கை, இயக்கம் பற்றி அறியும் ஆர்வமும் அன்பும் உடையவர்களோடு தொடர்பு கொள்ள 'உலகத் தமிழினம்' பேரில் இந்த அறிவிக்கையை எழுதுகின்றேன்.

பாவலரேறு சிறையில்—பசுந் தமிழையும் இனத்தையும் காக்கத் தம் இளைய மகன் பொழிலன், துரை தென்னவன், சுகுமாறனுடன்!

இந்த நேரத்தில் எதிர்வரும் கருத்துகளை எழுத்துகளைச் செய்தி ஏடுகளில், நூல்களில் துண்டறிக்கைகளில் காண்பீர்கள். அவற்றைப் பற்றிய உங்கள் கருத்தோட்டங்களை எழுதுங்கள். அவற்றைத் தலைமைக்கு விடுத்து வையுங்கள்.

கருத்துப் பரிமாற்றம் நமக்குத் தெளிவையும், துணிவையும் ஊட்டும்!

'அணு நூலகம்'—விற்பனைக்குத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் வாங்குகிறது.

'கல் குதிரை'—'மனஓசை'—

குணாவின் நூல்கள் வந்துள்ளன. 'அறிவே ஆற்றல்' ஆகவே, தமிழில் நம் அறிவு பொலிவு பெற்று விளங்கத் தொடர்புகளை விரிவு செய்யுங்கள். நம், இளைஞர்கள், நண்பர்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளுங்கள்—உண்மை உறவை வளர்த்துக் கொள்ள முயலுங்கள்.

உடுமலை ஓவியர், பாவலர். ப. **அறவாழி** அவர்களின் அன்னையார் மறைவுற்ற துயரச் செய்திக்கு நம் இரங்கலைத் தெரிவிப்போம்.—

அறிஞர். **அப்பாத்து**ரையாரின் குடும்ப நலத் திட்டத்திற்குப் பொருளுதவும் அருளுள்ளங்களை வாழ்த்துவோம்.—

பாவலரேறு—ஆவிற்கு நீரென்றிரக்கவும் நாணுகிறவர். அவர் தமிழின முன்னேற்ற முயற்சிக்காகப் படும் தொல்லைகளில் நாமும் முடிந்த வரை பங்கேற்போம்!

அன்புடன்,
பறம்பை அறிவன்.
துணைப் பொதுச் செயலர்.

2) உ. த. மு. க. ஒரு போட்டி அமைப்பில்லை.

தமிழினமே, உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், 'தமிழ்ச் சமயம்' போல செயல்படுமா என்று கேட்டார் ஒரு தோழர்.

Scanned with CamScanner

'அப்படியென்றால், அது பின் தங்கிய உணர்வுகளின் கூடாரம்' என்று கருதி விடல் வேண்டாம் என்றேன்.

உ. த. மு. க வின் ஏழு கொள்கைகள் வானவில்லின் ஏழு வண்ணங்கள். அவை, மழை தோன்றப் போகும் அறிகுறியாதல் கூடும்.

அந்தக் கொள்கைகளை...வெளிப் படுத்திட— மக்களிடம் எடுத்துச் செல்லத் தம் கை வண்ணம் காட்டி வருகின்றவர் உ. த. மு. க வின் ஆர்வலர் எனலாம்!

காட்டாக, அருவருப்பு மிக்க திரைப்படங்கள், நூல்கள் நடவடிக்கைகளை எதிர்க்க மக்களிடம் கருத்துப் பரப்பலை மேற்கொள்ளும் உ.த.மு.க. ஆர்வலர், அங்கங்கே அன்பர்களைத் திரட்டிக் கலை வடிவங்களின் கருத்துரையாடல்களில் ஈடுபடலாம்!

தங்கள் வேலையைப் பங்கிட்டுக் கொண்டு திட்டமிட்டு—முன்னறிவிப்புச் செய்து இக்கருத்துப் பரப்பலில் ஈடுபடலாம்!

இவர்கள் ஒரு செயலின் பொருட்டு ஒன்றுபடவும், வேறொரு செயலின் காரணமாக விலகி நிற்கவும் கூடும்.

ஆனபோதும், ஆர்வலர் உ. த. மு. க. பேரில் செயல்படும் ஒவ்வொரு கட்டத்திலும், அனைத்து நடவடிக்கைகளையும் தலைமைக்கும், து பொ. செயலர்க்கும் அறிவிக்கை செய்தல் வேண்டும். அங்கிருந்து பெறும் கருத்துகளுக்கு உரிய மதிப்பளிப்பதும் கட்டுப்படுவதும் வேண்டும்.

உ. த. மு. க. கொள்கைக்குப் புறம்பாகச் செயல்படும் எவரும் எதிர்காலத்தில் அதன் பேரில் இயங்கத் தலைமை ஒப்புதல் தாராது.

வரவு-செலவு அறிவிக்கையை மக்களிடம் அச்சிட்டு வழங்கவும்—தலைமைக்கு முறையாகத் தெரிவிக்கவும், திரட்டப்படும் தொகையில் மூன்றில் ஒரு பங்கினைத் தலைமைக்குச் செலுத்தவும் உரியவர் உ. த. மு. க.வினர் ஆவர்.

தொடர்ச்சியான செயல் திட்டம் கொண்டவர் உ த. மு. க. வில் போற்றிப் பாராட்டப் பெறுவர்.

ஆம், ஒன்று மட்டும் உறுதி. தமிழர், தமிழினத்தவர் அனைவரும் கட்டணம் செலுத்தாத உறுப்பினர்களே! அவர்களின் குரலாக, கொள்கையாக, செயலாக உ. த. மு. க. விளங்கும்! எனவே, இதற்கு ஒரு போட்டியுமில்லை! உறவுமிக்க,

பறம்புக்குடி 19-5-90 **பறம்பை அறிவன்.**

3) தமிழினமே இணைக!

தமிழினமே,

உன் நலமே பெரிதென்று நம்பி உ. த மு க. உள்ளது. இதன் வேலை கடினமானது. பல்வேறு மன அழுத்தங்களையும் தாங்கிக் கொண்டு, ஒரு பெரிய கடமைக்காகக் காலமெல்லாம் தவம் செய்யும் உ. த. மு க. எனவே, உ. த. மு க. வின் பணிகள், மென்மை, வன்மைகளைக் கணக்கில் கொள்ளும். அதே வேளை நன்மை கருதி நெடுகிலும் உழைக்கும்!

தமிழகம், இந்தியாவில் உள்ள பிற தேசங்கள், உலகில் உள்ள தேசம் யாவிலும் உள்ள தமிழர் நலன் கருதும் நல்லெண்ணப் படையாக உத.மு..க, மூகிழ்க்கும் என்ற நம்பிக்கையோடு நாம் செயல்படுவோம்!

சிங்கப்பூர் 'அறிவாளிகளை' இந்திய மண்ணிலிருந்து அதிகம் எதிர்பார்க்கிறது. தமிழர்கள் கூலிகள் என்ற நிலைமை மாறி, அவர்கள் அந்தந்த மண்ணில் உரிமையும் பெருமையும் பெற்று வாழ்கிறார்கள் என்ற நல்ல வசதிக்காக உ. த. மு. க. காத்துக் கொண்டிருக்கிறது. அறிவார்ந்த தமிழினம் அடிமைப் பட்டுள்ளதென்ற அவலம் நீங்க வேண்டும் என்பதே உ.த.மு.க.வின் துடிப்பெல்லாம்!

ஆகவே, உ. த.மு.க.வின் உணர்வுகளை உள்வாங்கிக் கொண்டு தமிழினமே இணைக.

3. துணைப் பொதுச்செயலர்க்கு வந்த மடல்கள்.

(1) ச. சிவசங்கு, தலைவர், கொற்கைத் தமிழ் மன்றம், சிறுத்தொண்ட நல்லூர் 628 802— 22-4-90

கொள்கை பொங்கி வழியும் நண்ப! தங்கள் கடிதம் காணலானேன். ஐயா. சென்னையில், தாம் கடிதம் எழுதுவதாய்க் கூறினார்கள், இங்குத் தமிழ் உணர்வும், அதற்கேற்ற செயற்பாடும் உள்ள நண்பர்கள் காணல் அரிது. சொல் உண்டு. செயல் வழுக்கலும் உண்டு. நான், நம் தனித் தமிழ்க் கொள்கை வழி ஏதேனும் முடிந்தால் சிறு பணிகள் செய்ய முயலுவேன். அகவை முதிர்வால் ஓடியாடிச் செயலாற்ற இயலாமல் உள்ளேன். எந்த அளவுக்கு என்னைத் தாங்கள் பணி வாங்க இயலுமோ அந்த அளவு தாங்கள் தெரிந்து பணி வாங்குக...''

(2) பெ. மணியரசன், 25-15 லால் கான் தெரு, சிதம்பரம்—608001 —23490

அன்பு மிக்கத் தோழர் பறம்பை அறிவன் அவர்கட்கு, வணக்கம். தங்களது மடல் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி.

'உலகத் தமிழின முன்னேற்றக் கழக'த்துடன் 'தமிழ்க் கலை இலக்கியப் பேரவை'— பண்பாட்டுத் தளத்தில் தோழமை கொண்டு இயங்கலாம் என்ற தங்களது முன் மொழிவு சரியானதே. வரவேற்கத் தக்கதே!

தமிழ்க் கலை இலக்கியப் பேரவையின் பொறுப்பாளர்களிடம் இது பற்றிப் பேசுகிறேன், பின்னர் எழுதுகிறேன்.

தோழமையுள்ள.

பெ. மணியரசன்.

Scanned with CamScanner

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாவேந்தரைக் கொண்டாட முற்றூட்டுப் பெற்ற முழுவுரிமையாளரோ?

இனி, பாவேந்தர் விழாவை மட்டுமன்று, **தஞ்சைத் தன்னுரிமை மாநாட்டையும்** கூட அவர் ஏன் தடை செய்தல் வேண்டும்? அம் மாநாடு தமிழ்மொழிக்கும், தமிழினத்திற்கும் நன்மை செய்யாது என்று கலைஞர் கணித்து விட்டாரோ? ஆர். எசு. எசு.க்காரனையும், பாரதிய சனதாக்காரனையும், விசுவ இந்து பரிசத்துக்காரனையும் பிராமண சங்கக்காரனையும் மகிழ்விப்பதற்கு, நிறைவு செய்வதற்குத் தமிழரின் தன்மான உரிமையை, அரசியல் பொருளியல் கோரிக்கைகளைக் கலைஞர் அடகு வைத்து விட வேண்டுமோ? அவர்களுக்கு மட்டும் சார்பாக நடக்க கலைஞர் என்ன, அவர்களின் **தத்துப் பிள்ளையா?** அல்லது **ஒட்டுப் பிள்ளையா?**

கலைஞரின் மாபெரும் அரசியல் தவறு, தஞ்சைத் தன்னுரிமை மாநாட்டைத் தடை செய்தது! அதைவிட இமையமலைத் தவறு, அதன் தலைவர்களையும் அறிஞர்களையும் தொண்டர்களையும் சிறையில் இட்டது!

இச் செயல்களே அவரின் அரசியல் கரவாண்மைக்கும், பார்ப்பன உறவாண்மைக்கும், அமைவின்மைக்கும், நடுநிலையின்மைக்கும், தற்சிந்தனையின்மைக்கும், தொலைநோக்கின்மைக்கும், தற்பெருமை வஞ்சகவன்மைக்கும் அவரின் பதவிப் பித்துக்கும் தக்க — போதிய — சான்றுகளாக என்றென்றும் வரலாற்றில் நின்று நிலவுவனவாகும்!

தமிழுக்குத் தொண்டு செய்யும் தமிழனுக்குத
தடைசெய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்!
—பாவேந்தர்

சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர் —(962)

ஆரவார அரசியலும் அடங்கிய அறிவும்!

"பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார்" என்ற குறளுக்குப் பெருமைத் தந்த பெருந்தகையே! வணக்கம்! "துக்ளக்"கில் பெ. சீனிவாசனின் (தெலுங்கர்) வாயடங்காப் பிதற்றலைத் தமிழன்பர்கள் காட்டியே படிக்க நேர்ந்தது. எனினும், "வானத்தைப் பார்த்து நாய் குரைக்கிறது" என்னும் சிறுபிள்ளையில் கேட்ட பழமொழிக்கேற்ப, அவற்றைத் தூக்கி எறிந்து விட்டேன். ஆனால் தாங்கள் '**தமிழ்நில**'த்தில் தந்த விளக்கம் எனக்குப் பெரும் வியப்பை ஏற்படுத்தியது. வைரம் விற்பவனுக்கும், கருவாடு விற்பவனுக்கும், ஆசானின் கருத்துரைக்கும், குடிகாரனின் உளறலுக்கும், வெளிச்சத்துக்கும் இருட்டுக்கும் மலர்க்கூடைக்கும், மலக்கூடைக்கும் உள்ள வேறுபாடுகளை உணர்ந்து உரம் பெற்றேன்.

அரசியலில் போலித் தமிழைப் பேசிப் பேசியே தலைவர்களாகப் பொது மக்களை ஏமாற்றித் திரியும் எத்தர்களுக்கு, மலையருயின் தோற்றமும் முடிவும் தெரியாது.

பெருஞ்சித்திரனாரை எடை போட, பெ. சீனிவாசன் கழகத்தினர்க்குத் தகுதி வேறு இருக்கின்றதா? விறகை எடைபோடும் எடைக்கருவியும், தங்கத்தை எடை போடும் எடைக் கருவியும், ஒன்றா? பெயரைக் கூடத் தமிழில் மாற்றாத தலைவர்கள் எல்லாம் தமிழர்களை எடை போடும் துலாக்கோலா? பார்ப்பன நச்சுக்குப் பால் வார்க்கும் தமிழரைப் பழி கூறித் திரியும் அரசியல் கொம்புகளுக்குத் '**தமிழ்நிலம்**' கொடுத்த விளக்கம், என் போன்ற உண்மை நெஞ்சங்களின் கொதிப்புக்கு நன்மருந்தை மயிலிறகால் நீவி விட்டது போன்றிருந்தது.

மொழி, இன, நாட்டு உணர்வுகளுக்கு எங்களின் தமிழ் நெஞ்சங்கள் துணை நிற்கும்.

வாழ்க! உண்மைத் தொண்டு! இவண்
— **நற்றிணை** — சென்னை-4.

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 56

ஆரியப் பார்ப்பனன் எந்த ஞாயம் பேசினாலும் அதில் அவன் சாதி உயர்வு, இந்து மதப் பின்னணி, மேலாளுமை, சூழ்ச்சி முதலிய அனைத்தும் அடங்கியே இருக்கும்.

மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 139

அனுபபுதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலத் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண். 847829.

உறுப்பினர்.

தனி இதழ் விலை	உரு.	1-00
ஆண்டுக் கட்டணம்	உரு.	50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு.	25-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணாசலத் தெரு, சென்னை-5.

தமிழர் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ்கள்! தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு!

TN/MS(C) 657

Scanned with CamScanner